# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 13.05.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 8909/F/2024**

திரு.Er.P.சத்தியமூர்த்தி .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்/
அரசு சார்புச் செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்புற
வளர்ச்சித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை-09. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.Er.P.சத்தியமூர்த்தி அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.P.சரவணன், பிரிவு அலுவலர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 13/04/2024 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் சென்னை தலைமை செயலக அரசு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை வெளியிட்ட 4(1) நிலம் எடுப்பு விளம்பரம்

சரியாளதா என்று கடிதம் மூலம் உறுதிபடுத்த 12.04.2024 தேதியன்று தான் அனுப்பிய மனு வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களுக்கு கிடைக்கப்பெற்றனவா என்பன போன்ற 7 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை, மனுதாரர் தனக்கு தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 25.05.2024 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்கவில்லை. இந்நிலையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 19(3)ன் கீழ் 04.07.2024 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 03.05.2024 மற்றும் 10.06.2024 தேதியிட்ட கடிதங்கள் மூலம் இனம் வாரியாக தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் குறித்து மனுதாரரின் கருத்துக்களையும், வாதங்களையும் தெரிவிக்க அவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தும் அவர் இன்றைய விசாரணைக்கு (13.05.2026) ஆஜராகத் தவறியுள்ளார். இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய தகவல்கள் 03.05.2024 மற்றும் 10.06.2024 நாளிட்ட கடிதங்கள் மூலம் வழங்கப்பட்டிருப்பதை உறுதி செய்து இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 8909/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்/
அரசு சார்புச் செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்புற
வளர்ச்சித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை-09.

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திரு.Er.P.சத்தியமூர்த்தி,
எண்.01, விஷ்வாமித்ரர் தெரு,
முத்துலட்சுமி நகர்,
சிட்லபாக்கம்,
சென்னை-600064.

Copy to file: KR/PA